**சுருக்கம்**

திட்டங்கள் – மாநிலத் திட்டம் – ‘‘கலைஞர் வீடு வழங்கும் திட்டம்’’ – வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டது – தகுதி அட்டைகள் வழங்குதல் மற்றும் திருத்தம் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மாஅதி1) துறை

அரசாணை (நிலை) எண். 106 நாள்: 23.11.2010

படிக்கப்பட்டவை:

1) அரசாணை (நிலை) எண்.68, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 14.06.2010.
2) அரசாணை (நிலை) எண்.96,ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 01.10.2010.
3) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அவர்களின் கடித எண்.16263/2010/ KHS, நாள் 11.11..2010.

* * * * *

**ஆணை:**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் ‘கலைஞர் வீடு வழங்கும் திட்டம்’ எனும் ஒரு புதிய திட்டத்தை செயல்படுத்தவும், அதற்கான வழிகாட்டு நெறிமுறைகளையும் வகுத்து ஆணைகள் வெளியிடப்பட்டன. இவ்வரசாணையின் இணைப்பு III-ல் கலைஞர் வீடு வழங்கும் திட்டத்தின்கீழ் குடிசைகளின் கணக்கெடுப்பு பணியாளர்கள் மற்றும் மேலாய்வு அலுவலர்களுக்கான அறிவுரைகள் வழங்கப்பட்டன.

2) மேலே மூன்றில் படிக்கப்பட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் செயற்குறிப்பில் (i) கலைஞர் வீடு வழங்கும் திட்டத்தின்கீழ் தகுதியுள்ள நபர்களுக்கும் மற்றும் நிபந்தனையுடன் தகுதியுள்ள நபர்களுக்கும் சில நிபந்தனைகளுடன் தகுதி அட்டைகள் வழங்கலாம் எனவும் (ii) அரசாணை (நிலை) எண்.68, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 14.06.2010–ன் இணைப்பு–III-ல் குறிப்பிடப்பட்டுள்ள ‘நிபந்தனையுடன் தகுதியுடையவை’ மற்றும் ‘தகுதியற்றவை’ என வகைப்படுத்தப்பட்டுள்ள இனங்களுக்குரிய நிபந்தனைகளை திருத்தம் செய்து, ஆட்சேபணைக்குரிய புறம்போக்கு நிலங்களில் கூரை வேயப்பட்ட ஓலைக் குடிசைகளை நிபந்தனையுடன் தகுதியுடையவை

என்ற வகைப்பாட்டின்கீழ் கொண்டுவரலாம் எனவும் தெரிவித்து அதன்மீது தக்க ஆணை வெளியிடுமாறு அரசினை வேண்டியுள்ளார்.

**3)** ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் செயற்குறிப்பினை அரசு கவனமாக பரிசீலனை செய்து அவற்றை ஏற்றுக் கொள்ளலாம் என முடிவு செய்து, நடப்பாண்டில் **(2010-11)** கலைஞர் வீடு வழங்கும் திட்டத்தின்கீழ் தேர்வு செய்யப்பட்டவர்கள் நீங்கலாக, எஞ்சிய சுமார் **8.35** இலட்சம் தகுதியுள்ளவர்களுக்கும், நிபந்தனையுடன் தகுதியுடைய சுமார் **3.25** இலட்சம் நபர்களுக்கும் மற்றும் ஆட்சேபணைக்குரிய புறம்போக்கு நிலத்தில் ஓலைக் குடிசைகளில் வசிப்பவர்களில் இத்திட்டத்தின் பிற நிபந்தனைகளை நிறைவு செய்யும் சுமார் **1.90** இலட்சம் நபர்களுக்கும் ஆக மொத்தம் **13.50** லட்சம் நபர்களுக்கு அரசாணை (நிலை) எண்.**96**, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் **01.10.2010**–ல் ஒப்பளிப்பு செய்தவாறு ரூ.**6.75** கோடி செலவில் கீழ்கண்ட நிபந்தனைகளின்படி தகுதி அட்டைகள் வழங்க அரசு ஆணையிடுகிறது.

**<u>தகுதியுடைய இனங்கள் – நிபந்தனைகள்</u>**

1. கலைஞர் வீடு வழங்கும் திட்ட விதிமுறைகளுக்குட்பட்டு நிலையான கான்கிரீட் வீடு வழங்கப்படும்.

2. தெரிவு செய்யப்படும் ஆண்டிலும் தகுதி உடையோராக இருக்க வேண்டும்.

3. இந்த தகுதி அட்டை பிறருக்கு மாற்றப்படத்தக்கதல்ல.

**<u>நிபந்தனையுடன் தகுதியுடைய இனங்களுக்கு கூடுதல் நிபந்தனைகள்</u>**

1. குடிசையில் வசிப்பவர் வீட்டுமனைக்கான தெளிவான நில உடமைச் சான்றினை சமர்ப்பிப்பதற்கு உட்பட்டு இந்த தகுதி அட்டை வழங்கப்படுகிறது.

2. அரசு புறம்போக்கு நிலங்களில் வசிப்பவர்களுக்கு புதிதாக பட்டா வழங்குவதற்கு உட்பட்டு இந்த தகுதி அட்டை வழங்கப்படுகிறது.

3. பிற நிறுவனங்களுக்குச் சொந்தமான நிலங்களில் குடியிருப்போருக்குச் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் தடையின்மைச் சான்று பெறுவதற்கு உட்பட்டு இந்த தகுதி அட்டை வழங்கப்படுகிறது.

4. தெரிவு செய்யப்படும் ஆண்டில், கலைஞர் வீடு வழங்கும் திட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ள **4** அடையாளச் சான்றுகளில் குறைந்தபட்சம் **2** அடையாளச் சான்றுகள் இருக்க வேண்டும்.

4) மேலே பத்தி 3–ல் வெளியிடப்பட்டுள்ள ஆணையினைத் தொடர்ந்து, அரசாணை (நிலை) எண்.68, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 14.06.2010–க்கு கீழ்கண்டவாறு திருத்தம் வெளியிடப்படுகிறது

## திருத்தம் - I

அரசாணை (நிலை) எண்.68, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 14.06.2010-ன் இணைப்பு III-ல் கணக்கெடுப்பு பணியாளர்கள் மற்றும் மேலாய்வு அலுவலர்களுக்கான அறிவுரைகளில் ஒரு ஓலைக் குடிசையானது கலைஞர் வீடு வழங்கும் திட்டத்தின்கீழ் நிலையான வீடாக மாற்றப்படுவதற்கு 'நிபந்தனையுடன் தகுதி' என்ற வகைப்பாட்டின்கீழ் காணப்படும் வரிசை எண்.(5)-க்கு கீழ்கண்ட பத்தி பதிலீடு செய்யப்படுகிறது.

5) கேள்விக்குரிய உடமை (கலம் 21 க்கான பதில் 'ஆம்' ) / ஆட்சேபணையற்ற புறம்போக்கு நிலத்தில் குடிசை கட்டப்பட்டிருக்க வேண்டும் (கலம் 17 க்கான பதில் '2' ) / ஆட்சேபணையுள்ள புறம்போக்கு நிலத்தில் கட்டப்பட்ட குடிசை (கலம் 17 க்கான பதில் '1') / நிறுவனத்திற்கு சொந்தமான இடத்தில் கட்டப்பட்ட குடிசை (கலம் 18 க்கான பதில் '1' அல்லது '2' . . . அல்லது '6') **மற்றும்**

கீழ்காணும் நான்கு இனங்களில் குறைந்தபட்சம் ஏதேனும் ஒன்றுக்கு விவரம் அளிக்கப்பட்டிருந்தால்.

(i) குடும்பத்தின் தலைவர் அல்லது குடும்ப உறுப்பினர் ஒருவரின் பெயர் இடம்பெற்றுள்ள மே 2009ன் வாக்காளர் பட்டியலின் பாகம் எண் மற்றும் வரிசை எண் (Part No. and Serial No.)

(ii) குடும்ப அட்டை எண்.

(iii) வீட்டு வரிவிதிப்பு எண், மற்றும்

(iv) தமிழ்நாடு மின்வாரிய மின் இணைப்பு எண் (அல்லது 'குடிசை விளக்குத் திட்டம்'). (அதாவது கலம் 7,11,12, மற்றும் 13 ஆகியவற்றில் குறைந்தபட்சம் ஏதேனும் ஒன்றுக்கு விவரம் அளிக்கப்பட்டிருந்தால்).

## <u>திருத்தம் - II</u>

திருத்தம்-I-ஐத் தொடர்ந்து, மேற்குறிப்பிட்ட அறிவுரைகளில் காணப்படும் 'தகுதியற்றது' என்ற வகைப்பாட்டின்கீழ் வரிசை எண்.(3)-ல் காணப்படும் "ஆட்சேபணையுள்ள புறம்போக்கு நிலத்தில் வீடு கட்டப்பட்டிருந்தால் (கலம் 17 க்கான பதில் '1' )" எனும் நிபந்தனை நீக்கம் செய்யப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கா. அலாவுதீன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை -15.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள். (ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் மூலமாக)
அனைத்து மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளின் திட்ட இயக்குநர்கள்
(ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் மூலமாக)
அனைத்து மாவட்ட ஊராட்சிகள்
(ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் மூலமாக)
அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலர்கள்
(ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் மூலமாக)
சம்பளக் கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை – 35.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (பரா.1) துறை, சென்னை–9

<u>நகல்</u>
மாண்புமிகு முதலமைச்சரின் செயலாளர், சென்னை – 9.
மாண்புமிகு துணை முதலமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை – 9.
நிதி (ஊவ) துறை, சென்னை – 9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்